JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW6 | Prosecution /Defence / Court | |
| Name | Tr.Nawab Jhan | Caste | |
| Father's Name | Kadhar Batcha | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 05.10.2021

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்துகொண்டு தற்பொழுது ஈரோடு மாவட்டம் நம்பியூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிவருகிறேன். கடந்த 2014 ஆம் வருடம் நான் மேற்சொன்ன கிராமத்தில்தான் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றிவந்தேன். அந்த சமயத்தில் உதவியாளராக முருகேசன் என்பவர் பணியாற்றிவந்தார், கடந்த 07.12.2014 ஆம் தேதி நிலவரி வசூல் செய்வது சம்மந்தமாக மதியம் 12.45 மணியளவில் மூன்றாம்பள்ளி வாய்க்கால் அருகில் சென்றுகொண்டிருக்கும்போது அப்பொழுது பணியில் இருந்த நம்பியூர் காவல் ஆய்வாளர் ஒரு நபரை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார். அவர் அருகே காவல் துறையினர் உடனிருந்தனர். என்னவென்று விசாரிக்கும்பொழுது ஒரு நபர் மோகன் என்கிற மோகன்ராஜ் நம்பியூர் காவல் துறையினர் கைது செய்துள்ளதாக கூறினார்கள். மோகன் என்கிற மோகன்ராஜ் தற்பொழுது நீதிமன்றத்தில் வலதிலிருந்து இடதுபுறமாக 3-வதாக அமர்ந்திருப்பவர்தான் அந்த நபர் ஆவார். (எதிரியை சாட்சி அடையாளம் காட்டினார்) மேலும் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் தயாரித்தனர். அதில் நாங்கள்

இருவரும் சாட்சி கையெழுத்திட்டோம். இது குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>.,

நான் மூணாம்பள்ளி வாய்க்கால்-க்கு சென்றபோது போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் அந்த இடத்திற்கு எப்பொழுது வந்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அதனால் எதிரி மோகன்ராஜ்-யை எப்பொழுது எங்குவைத்து எவ்வாறு கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை. மோகன்ராஜின் வாக்குமூலம் பதிவு செய்தபின்னர் ஆய்வாளர் எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். நானும் எனது உதவியாளரும் எங்கள் வேலைகளை பார்க்கசென்றுவிட்டோம் என்றால் சரிதான். இந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் எதாவது கைப்பற்றினார்களா என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்துறை ஆய்வாளர் எதிரியிடம் கேள்விகள் கேட்டு அதை பதிவு செய்தார் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றும் நான் கிராம நிர்வாக அலுவலார் என்பதால் காவல் நிலையத்தில் தயார் செய்த ஆவணத்தில் கையெழுத்திட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு தினசரி பதிவேட்டில் அன்றாட பணிகளை பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான் ஆனால் அன்றைய தினம் வேலைப்பளூ அதிகமாக இருந்ததால் பதிவு செய்யவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 3சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter